**පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය : 492**

**ආයතනයේ නම : දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය - පුත්තලම**

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119 (4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරිම.

**பாராளுமன்ற வெளியீட்டு தொடர் இலக்கம் : 492**

**நிறுவனத்தின் பெயர் : மாவட்ட செயலகம் - புத்தளம்**

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) கீழ் நிறுவனங்களிற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

**Parliamentary Series No:492**

**Name of the Institution: District Secretariat - Puttalam**

Submission of observations of Hon. Minister in charge of the Institutions and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No.119 (4).

**அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பான பொதுக் கணக்குகள் தொடர்பான குழுவினால் பாராளுமன்றம் ஊடாக சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளுக்குப் பொறுப்பான அமைச்சரினால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகள் மற்றும் நடவடிக்கைகளை முன்வைத்தல்.**

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் :- 492
மாவட்ட செயலகம் - புத்தளம்

| பொதுக் கணக்குகள் தொடர்பான குழுவினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகள் மற்றும் வழிகாட்டுதல்கள் | தற்போதைய முன்னேற்றங்கள் |
|---|---|
| **பகுதி ஒன்று -** | |
| 1. கணக்காய்வு அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து கணக்காய்வு விசாரணைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளிக்கப்படவில்லை. | கணக்காய்வு விசாரணைகளுக்கு பதிலளிக்கும் சநதர்ப்பத்தில், ஒரு மாத காலத்திற்குள் பதிலளிப்பதானது நடைமுறையில் சிரமமானதாக அமையக்கூடிய சந்தர்ப்பங்கள் உள்ளன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் இடைக்கால பதில்கள் வழங்கப்படுகின்றன. |
| 2. மாவட்டச் செயலகத்தின் கீழ் உள்ள அனைத்து பிரதேச செயலகங்களின் கணக்காய்வு குழு குறைந்தபட்சமேனும் கூடியிருக்கவில்லை. | பல்வேறு காரணங்களினால் இக்குழு கூடுதல் தொடர்பில் தடைகள் ஏற்பட்டுள்ளதுடன், 2026 ஆம் ஆண்டில் இயன்றளவு இச்சிக்கல்களை குறைத்துக் கொண்டு இதுவரையில் 19 கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| 3. ஆண்டு பொருட் சுற்றாய்வு வெளிப்பட்ட மேலதிக, பற்றாக்குறை தொடர்பான பரிந்துரைகள் மற்றும் பிற பரிந்துரைகளானது நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் செயற்படுத்தப்படவில்லை. | 01/2020ஆம் இலக்க அரச நிதிச் சுற்றிக்கையின் பிரகாரம் பொருட் சுற்றாய்வு குறித்த காலப்பகுதிக்குள் (ஜூன் 15) செயற்படுத்தப்பட்டுள்ளது. (2025.06.11) |
| 4. பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்ட வாகனமொன்றினை 8 மாதங்களுக்கும் குறைவான காலத்திற்குள் அகற்றப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் காலங்களில் அதனை அகற்றுவதற்கான செயற்பாட்டினை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்களை வழங்குவதற்கும், பின்னூட்டற் செயற்பாடுகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்படும். |
| 5. ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் இருந்த கடன் மீதிகள் காணப்பட்டன. | 10-20 ஆண்டுகளாக நிலுவையில் இருக்கக் கூடிய கடன்கள் தொடர்பில் அவற்றை பதிவிலிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் ஏனைய கடன் நிலுவைகளை அறவிடுவதற்கான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| 6. பொது சேமிப்புக் கணக்கில் உள்ள காலாவதியான வைப்புத்தொகைகள் தொடர்பாக நி.பி. 571-இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரச விடுதிகளுக்கான பினை வைப்பு/ வழக்குகள் காரணமாகவும் (மாவட்ட செயலகம் - ரூ. 540,000.00, முந்தல் பி.செயலகம் ரூ. 17,100.00 மற்றும் ரூ. 15,495.00) காணிகள் தொடர்பான வைப்புக்களை தவிர்த்து ஏனைய 02 வருடங்களுக்கு மேற்பட்ட அனைத்து வைப்புக்கள் தொடர்பாகவும் நி.பி.571ன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| **பகுதி இரண்டு -** | |
| 1. மாதாந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்கள் நடத்தப்பட டிருக்கவில்லை. | ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்கள் தவிசாளரினால் வழங்கப்பட்ட திகதிகளிலேயே நடத்தப்படுகின்றன. இருப்பினும், 2022 இல் நாட்டில் ஏற்பட்ட கொரோனா தொற்று நிலைமைகள் காரணமாக, சுகாதார வழிகாட்டுதல்களுக்கு இணங்க உத்தியோகத்தர்கள் ஒன்றுகூடுவது கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. |
| 2. மாவட்ட வீட்டுவசதிக் குழு மாதந்தம் கூடவில்லை. | வீடமைப்பு அபிவிருத்தி சபையினால் கோரப்படும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் காலங்களிலும் அவ்வாறே நடாத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

| | |
|---|---|
| 3. மாவட்ட உர ஒருங்கிணைப்புக் குழு மாதந்தம் கூடவில்லை. | இக்குழு கூட்டமானது ஒரு போகத்திற்கு ஒன்று என்ற அடிப்படையில் இரு போகங்களுக்குமாக வருடத்திற்கு இரண்டு கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களிலும் அவ்வாறே நடாத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| 4. மாவட்ட விலை நிர்ணயக் குழு மாதந்தோறும் கூடவில்லை. | இக்குழுவானது வருடத்தில் 06 மாதங்களுக்கு ஒரு முறை கூடுவதன் காரணமாக வருடத்தில் இருமுறை இக்கூட்டமானது நடாத்தப்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களிலும் அவ்வாறே நடாத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |
| 5. நிறுவனத்தின் கணக்குகள் மீதான கணக்காய்வு அபிப்பிராயம், குறைபாடுடையது / தகுதிவாய்ந்தது / பாதகமானது என்ற நிலையில் இருந்தது. | பிழைகளற்ற கணக்காய்வு அபிப்பிராயமொன்றினை பெற்றுக்கொள்வது குறித்து இயன்ற அனைத்து நடவடிக்கைகளும் எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ளப்படும். |
| 6. மாவட்ட / பிரதேச போதைப்பொருள் தடுப்புக் குழுவின் கூட்டங்கள் காலாண்டுக்கு ஒருமுறை நடத்தப்படவில்லை. | காலாண்டிற்கு 01 என்ற அடிப்படையில் கூட்டம் நடாத்தப்படவில்லையாயினும் முன்வைக்கப்படுகின்ற சிக்கல்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டு அதற்கான தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளது. |
| 7. சிறுவர் உரிமைகள் தொடர்பான மாவட்ட சிறுவர் அபிவிருத்தி குழு காலாண்டுக்கு ஒருமுறை கூடவில்லை. | காலாண்டிற்கு 01 என்ற அடிப்படையில் கூட்டம் நடாத்தப்படவில்லையாயினும் முன்வைக்கப்படுகின்ற சிக்கல்கள் பற்றி கலந்துரையாடப்பட்டு அதற்கான தீர்வுகள் வழங்கப்பட்டுள்ளது. |
| 8. திட்டமிடப்பட்ட பயிற்சி வாய்ப்புகளில் வழங்கப்பட்ட பயிற்சி வாய்ப்புகளின் அளவு 50%க்கும் குறைவாக காணப்பட்டது. | அரச செலவீன முகாமைத்துவத்தின் கீழ் 2023ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற ஏற்பாடுகளுக்கு அமைவாக சேவை பிரமாணக் குறிப்புகளில் காணப்பட்ட பயிற்களை மட்டும் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது. |
| 9. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையிலுள்ள பரிந்துரைகள் செயற்படுத்தப்படவில்லை. | கணக்காய்வாரள் நாயகத்தின் அறிக்கையிலுள்ள பரிந்துரைகளுக்கு பதிலளிக்கப்பட்டுள்ளதுடன், பதில்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| 10. அதிகபட்ச சேவைக் காலத்தை நிறைவு செய்த உத்தியோகத்தர்களை முறையாக இடமாற்றம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. | வருடாந்த இடமாற்றத்தின் கீழ் உத்தியோகத்தர்களினால் விண்ணப்பிக்கப்பட்ட அனைத்து இடமாற்றங்களும் செயற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், 05 வருடங்களுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் பற்றிய தகவல்களை வருடாந்தம் நியமன அதிகாரிக்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

மாவட்ட செயலாளர்
மாவட்ட செயலகம்
புத்தளம்

Y. I. M. SILVA
District Secretary/Government Agent
Puttalam District

பிரதம கணக்காளர்
மாவட்ட செயலகம்
புத்தளம்

A.M.W.K. PRASANNA
CHIEF ACCOUNTANT
DISTRICT SECRETARIAT
PUTTALAM

## செயலாளரின் பரிந்துரை

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

S. Alokabandara
Secretary
Ministry of Public Administration,
Provincial Councils and Local Government

## அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2026 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

மாண்புமிகு (பேராசிரியர்) ஏ. எச். எம். எச். அபயரத்ன அவர்கள் (பா.உ)
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

Prof. A.H.M.H. Abayarathna
Minister of Public Administration, Provincial
Councils and Local Government
Independence Square, Colombo 07.